**கூட்டுறவு மிகை நிதியம் - 2019**

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை வழங்கவில்லை. எனது அறிக்கையில் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு**

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக விளைவுடைய ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாது ரூபா 4,791,681 தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தன. இருப்பினும், அவை நிதியத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு உள்ளன. மேலும் நிகரச் சொத்துக்களில் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 189,001 தொகையான பயன்படுத்த முடியாத கணனி மென் பொருட்கள் கற்பனைச் சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருந்தன. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மிகை நிதியத்திற்குச் சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | மீள் மதிப்பிடப்பட்ட குறித்த தொகையைக் கணக்குகளில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| விடயம் | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி | இணைந்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| கூட்டுறவு சங்க கடன் | 14,680,948 | - | 14,680,948 | கூட்டுறவு சங்கக் கடன் பேரேடு மற்றும் பட்டோலையில் காணப்படுகின்ற இந்த வேறுபாடு நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் வேறுபாடு ஆகும். | வேறுபாடு இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 தொங்கல் கணக்கு**

| விடயம் | தொகை | தொங்கலாக இருந்த காலப்பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| தொங்கல் கணக்கு | 9,475,735 | 20 வருடங்கள் | நீண்ட காலமாக முன் கொண்டு வரப்பட்டிருந்த மேற்படி நிலுவையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தொங்கல் கணக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெற வேண்டிய கூட்டுறவு சங்க கடன் | 620,477,724 | மீதி சான்றுபடுத்தல்கள் | மீதி சான்றுபடுத்தல்களுக்கான கடிதங்கள் இச் சங்கங்களினால் பல தடவைகள் அனுப்பப்படடிருந்ததுடன் அதற்கான பதில்களைப் பெறுவது நலிவான மட்டத்தில் இருந்தது. | மீதி சான்றுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தொகை | 5,029,486 | மீதி சான்றுபடுத்தல்கள் | நீண்ட காலமாக முன் கொண்டு வரப்பட்டிருந்த மேற்படி நிலுவையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீதி சான்றுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பொது வைப்புக் கணக்கு | 8,411,423 | விரிவான பட்டோலை | அவற்றை விரைவாகச் சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பட்டோலைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்புப் பிணை உரித்தாளர்கள் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் | நடப்பாண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீதிச் சான்றுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | கலைத்தல் கணக்கு (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதியொன்று | நடப்பாண்டில் அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் | கணக்குகளின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் | விரைவாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 3,871,256 | மீதி உறுதிப்படுத்தல்கள் | நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற மேற்படி நிலுவையைத் | மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஏ) | பெற வேண்டிய திறைசேரி நிதியம் | 81,871,370 | மீதி உறுதிப்படுத்தல்கள் | விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,721,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகையின் ஏனைய பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மிகை நிதியம் செலுத்த வேண்டிய ரூபா 6,017,551 தொகையான 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 1,834,392 தொகையான 05 பொறுப்பு கணக்குகளின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி மீதிகள் பல ஆண்டுகளாக முன் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் எதிர் காலத்தில் அதைக் கவனிப்பதன் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 192,948,247 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 204,460,518 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,512,244 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. வட்டி வருமானம் ரூபா 83,211,614 இனால் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகை தொடர்பாக திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலானது நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 823,971,799 ஆன கடன் தொகையில் 77 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 634,531,866 ஆன தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடக்கூடியதாக இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியான மேற்படி கடன் தொகையின் மிகுதிக்கான வட்டி ரூபா 255,706,442 ஆகக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மாகாண மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்கான பொறுப்பை ஏற்பதற்கு மாகாண ஆணையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். 2020 இல் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமல் போனது. மேற்படி கடன்களை மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும | கடன் தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் ரூபா 143,919,037 ஆன தொகை கடன்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 24,891,113 ஆன தொகை மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. மேலும் ரூபா 119,027,924 ஆன | மேற்படி கடன்களைச் செலுத்துவதை முடிவுக்கு கொண்டு வருவதை விரைவு படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பணம் செலுத்துவதற்குத் தவறினால் கடன்களை அறவிடுதல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அறவிடப்பட வேண்டியதாக இருப்பதுடன் இந்த பழைய நிலுவையானது 5 தொடக்கம் 27 ஆண்டுகள் வரையான காலத்திற்கு முன் கொண்டு வரப்பட்டிருந்தது. | | |
| (இ) | கூட்டுறவு நகரப் பல்பொருள் அங்காடிகளைத் தொடங்குவதற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இந் நிதியத்திலிருந்து ரூபா 12,000,000 ஆன கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துதல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாமதமானது. இவை 8-9 ஆண்டுகள் பழமையான நிலுவைகள் என்பதுடன் 2019 திசெம்பர் 31 இல் அறவிடக்கூடியதாக இருந்த தொகை ரூபா 9,965,693 ஆகக் காணப்பட்டது. | மேற்படி கூட்டுறவு நகரப் பல்பொருள் அங்காடிகளைத் தொடங்குவதற்காக வழங்கப்பட்ட கடன்களை விரைவில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 19,550,000 கடனானது நிலையான வைப்புப் பத்திரங்களாக வழங்கப்பட்ட பின்னர் பதிவளிக்கப்பட்ட தொகையாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கடன் தொகைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை 2019 திசெம்பர் 31 வரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த இரண்டு தரப்பினரிடமிருந்தும் தகவல்களைச் சேகரிப்பதன் மூலம் மேற்படி கடன்களை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவளிக்கப்பட்ட தொகையிலிருந்து ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,037,173 ஆன கடன் நிலுவை 34 பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அறவிட வேண்டியதாக இருந்தது. இக் கடன்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டவை ஆகும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ளபடி மேற்படி மாகாணப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வரையறுக்கப்பட்ட இலங்கை கோழிப் பண்ணையாளர் கூட்டுறவு சம்மேளனத்தின் பதிவு 2003 ஆம் ஆண்டில் இரத்துச் | சங்கத்தின் தலைப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்துத்துவதற்கும் பணத்தை விரைவாக | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டதுடன் அதன் தலைப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு தலைப்பாளர் நியமிக்கப்பட்டார். 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கலைத்தல் நடவடிக்கைகள் முற்றுப் பெறவில்லை என்பதுடன் கலைப்பவரின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மற்றும் இற்றை வரை 08 ஆண்டுகள் கழிந்த போதிலும் கலைப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.<br>கூட்டுறவு மிகை நிதியத்தினால் இச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடனில் 2019 திசெம்பர் 31 இல் ரூபா 100,000 ஆனது அறவிடப்பட வேண்டி யிருந்தது. | அறவிடுவதற்கும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (எ) | வரையறுக்கப்பட்ட இலங்கை பால் உற்பத்தியாளர் சம்மேளனத்தின் வணிக நடவடிக்கைகளுக்காக கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து ரூபா 18,249,750 கடன் வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் 2019 திசெம்பர் 31 இல் ரூபா 16,549,750 ஆனது அறவிட வேண்டியிருந்தது.<br>வரையயறுக்கப்பட்ட இலங்கை பால் உற்பத்தியாளர் சம்மேளனம் தற்போது செயற்படுவதில்லை. | பொலன்னறுவை மாவட்டப்பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பிற கூட்டுறவு நிறுவனங்கள் இக் கட்டிடத்திற்கான கோரிக்கையை முன்வைத்து அதற்கேற்ப பரீசீலிக்கப்பட்டதுடன் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இக் கடன்களை அறவிடுவதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ஒரு புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு 2012 செப்டெம்பர் 26 ஆந் திகதியன்று குருநாகல் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு மருத்துவமனைச் சங்கத்திற்கு ரூபா 100 மில்லியன் ஆன தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் காலதாமதமாகி இருந்தது. மேலும், 2019 திசெம்பர் 31 இல் ரூபா 94,083,304 ஆன தொகை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | மேற்படி சங்கம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 5,000,000 ஆன தொகையைக் கடன் வட்டித் தவணையாக செலுத்தியதுடன் மீதமுள்ள நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்காக வடமேற்கு கூட்டுறவு அபிவிருத்தி மாகாண ஆணையாளர் / பதிவாளர் விளக்கமளித்துள்ளார். | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | கட்டுமான ஒப்பந்தமொன்றிற்காக 2014 சனவரி 17 ஆந் திகதி கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து நிக்கவரெட்டிய வரையறுக்கப்பட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ரூபா | இச் சங்கத்தினால் பெறப்பட்ட கடனில் ரூபா 3 மில்லியன் ஆன தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்ததுடன் இன்றும் அறவிட வேண்டிய | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4,000,000 பெறுமதியான வட்டியில்லாக் கடன் ஒன்று பெறப்பட்டிருந்தது. கடன்களைச் செலுத்துதல் ஒப்பந்தங்களின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் கடனைப் பெற்று ஆறு ஆண்டுகள் கழிந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இல் ரூபா 1,000,000 ஆனது இன்னும் அறவிட வேண்டியதாக இருந்தது. | தொகை ரூபா 0ர1 மில்லியன் ஆகும். வடமேற்கு கூட்டுறவு அபிவிருத்தி மாகாண ஆணையாளர் / பதிவாளர் மீதமுள்ள நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்கு பிரதிகளுடனான கடிதங்கள் மூலம் சங்கத்திற்கு விளக்கமளித்துள்ளார். | |
| (ஒ) | காலி மாவட்ட வரையறுக்கப்பட்ட கூட்டுறவு மருத்துவ மனைச் சங்கத்திற்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 50,000,000 கடன்களைச் செலுத்தலானது ஒப்பந்தத்தின் பிரகாரம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் எந்த தவணையும் செலுத்தப்படவில்லை மற்றும் 06 வருடங்களான கடன் நிலுவை அத் திகதியில் காணப்பட்டது. | தென் மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் / பதிவாளர் இச் சங்கத்திடமிருந்து நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவதற்காக பிரதிகளுடனான கடிதங்கள் மூலம் விளக்கமளித்துள்ளார். மேற்படி கடன்களை விரைவாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒப்பந்தங்களின் பிரகாரம் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | கோபிகேன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு முறையே 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 10,000,000 மற்றும் 7,000,000 ஆன கடன்களில் ரூபா 15,527,320 ஆன தொகையானது 2019 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டியாக காணப்பட்டது. இவை 06 வருடங்கள் பழமையான கடன்களாகும் | வடமேல் மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் / பதிவாளர் நிலுவைக் கடன் தவணைகளை அறிவிடுவது தொடர்பாக பிரதிகளுடனான கடிதங்கள் மூலம் விளக்கமளித்துள்ளார். மற்றும் மேற்படி கடன்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | வரையறுக்கப்பட்ட நிகவரெட்டிய கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு மோட்டார் கிரேடர் இயந்திரம் மற்றும் ஒரு பலநோக்கு இயந்திரம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 19,500,000 ஆன கடனைச் செலுத்தலானது 2019 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இக்கடன் மீதிகளுள்ளான எவ்வித தவணையும் இற்றை | வடமேல் மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் / பதிவாளர் நிலுவைக் கடன் தவணைகளை அறவிடுவது தொடர்பாக பிரதிகளுடனான கடிதங்கள் மூலம் விளக்கமளித்துள்ளதுடன் மேற்படி கடன்களை விரைவில் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒப்பந்தங்களின் பிரகாரம் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையில் அறவிடப்படாததுடன் இவை 06 வருடங்கள் பழமையானவை ஆகும். | | |
| (க) | வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் வணிக நடவடிக்கைகளுக்காக இந் நிதியத்திலிருந்து ரூபா 75,000,000 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. கடன் வழங்கப்பட்டு 06 ஆண்டுகள் காலம் கடந்து விட்ட போதிலும் ரூபா 13,969,497 ஆன தொகை இன்னும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு மேற்படி பணத்தை விரைவில் அறவிடுவதற்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் செயலாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | கூட்டுறவு அபிவிருத்தி தேசிய நிறுவகத்திற்கு 2014 ஆம் ஆண்டில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படாமல் ரூபா 25,000,000 பெறுமதியான கடன் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. 06 ஆண்டுகள் காலம் கடந்து விட்ட போதிலும் ரூபா 22,119,454 ஆன தொகை 2019 திசெம்பர் 31 இல் அறவிடவேண்டியதாக காணப்பட்டது. | இக் கொடுப்பணவைத் தீர்ப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 3,119,454 ஆன தொகை 2020 யூலை 14 ஆந் திகதியன்று செலுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. | கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |